# தூத்துக்குடி மாநகராட்சி

## சாதாரண கூட்டப் பொருள்

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதி எண் 156(1) கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| 31.10.2025 | 1) தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் பாதுகாப்பு பணி மேற்கொள்ள மாநகராட்சி மூலம் பாதுகாப்பு பிரிவு 2019 ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்டு, பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பாதுகாப்பு பிரிவில் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் (CLC) மூலம் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 18 காவலர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். மேலும், தினக்கூலி அடிப்படையில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் சில்லரை செலவீன பணியாளர்களுக்கு, தினக்கூலி நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை கே3/2023559/2024 நாள்.09.07.2024-ன் படி, மேற்படி பாதுகாப்பு பணியாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம் நாளொன்றுக்கு ரூ.521/- என நிர்ணயம் செய்யப்பட்டு 26 செப்டம்பர் 2024 முதல் செப்டம்பர் 25, 2025 வரை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.<br>அதனைத் தொடர்ந்து, இம்மாநகராட்சியில் பாதுகாப்பு பிரிவில் பணிபுரியும் 18 காவலர்களுக்கு ஓராண்டுக்கு ஆகும் செலவீனத் தொகை ரூ.34,22,970/- ஐ (18 X 521 X 365 = 3422970) 26 செப்டம்பர் 2025 முதல் மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் | 707) அலுவலகக் குறிப்பின்படி 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் ஒப்பந்தப்படி, மேற்படி செலவினத்தினை மேற்கொண்டு அதற்கான 2% சேவை கட்டணம் நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. 2024-2025 ஆண்டுக்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சில்லரை செலவீன பணியாளர்களுக்கு தினக்கூலி நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்ட செயல்முறை ஆணை கே3/2023559/2024 நாள்.09.07.2024-ன் படி, இம்மாநகராட்சி பாதுகாப்பு பணியாளர்களுக்கான ஊதியம் நாளொன்றுக்கு ரூ.521/-ஐ நிர்ணயம் செய்து ஓராண்டுக்கான செலவினத் தொகை ரூ.34,22,970/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி ஓராண்டு செலவினத் தொகைக்கான 2% சேவை கட்டணம் ரூ.68,460/- ஐ நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்<br>சி1/2926/2019 | |
| | 2) அரசாணை எண் 27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **22.02.2023**ன் பிரகாரம் தூத்துக்குடி மாநகராட்சியில் மழைநீர் வடிகால் பணிகளை உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி **2022–2023**ன் கீழ் மேற்கொள்ள ரூ.**4900.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது.<br>சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் **18688/2022/TP1**, நாள் **11.07.2022**ன் படி உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி **2022–2023**ன் கீழ் மழைநீர் வடிகால் பணிகள் மொத்தம் **43.507** கி.மீ நீளத்திற்கு அமைக்கும் பணிக்கு ரூ.**4519.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து தலைமைப்பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனரகம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் **001/2022/DO1** , நாள் **19.07.2022**ன் படி மேற்படி மழைநீர் வடிகால் பணிகள் **8** சிப்பங்களாக ரூ.**4255.00** இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. தற்போது மேற்படி பணிகள் அனைத்தும் முடிவுற்றுள்ள நிலையில் மழைநீர் வடிகால் பணிக்கு அரசாணையின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.**4900.00** | 708) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

இலட்சத்தில், ரூ.4255.00 இலட்சத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது போக மீதமுள்ள சேமிப்பு தொகை ரூ.645.00 இலட்சத்தில் கூடுதலாக வந்த தொகை ரூ.44.22 இலட்சத்தினை மேற்படி திட்டப்பணியின் சேமிப்பு நிதியில் இருந்து ஈடு செய்ய மாமன்ற தீர்மானம் எண் 554நாள் 29.11.2024ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகைக்கு வேறுபணிகளுக்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்படி மழைநீர் வடிகால் பணிகளில் கீழ்க்கண்ட சிப்ப பணிகளுக்கு 01.01.2022 முதல் கூடுதலாக 6 சதவீதம் ஜி.எஸ்.டி வழங்கப்பட்டதன் காரணமாக மதிப்பீட்டுத் தொகையினை விட கீழ்க்கண்டவாறு கூடுதலாக செலவினம் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | சிப்பம் எண் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 8 | 520.00 | 532.21 |
| மொத்தம் | | 520.00 | 532.21 |

எனவே மேற்படி சிப்ப பணிகளில் கூடுதலாக ஏற்படக்கூடிய செலவினத் தொகை ரூ.12.21 இலட்சத்தினை இம்மாநகராட்சி பொதுநிதியில் இருந்து ஈடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்

இ1 / 1526 / 2022

3) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதிதிட்டத்தின் கீழ்பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் சுகாதாரப் பிரிவு அலுவலருக்கு 8 எண்ணம் Bollero Jeepஅலுவலகப் பணிகளுக்கு மாத வாடகையின் அடிப்படையில் ஒரு வருடகாலத்திற்கு வழங்கி இயக்குவதற்குபணிக்கு06.10.2025அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்டஇரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யபட்டத்தில் கீழ்கண்டுள்ளவாறு விலைவிகிதம் கொடுத்துள்ளனர்.

709) அலுவலகக் குறிப்பின்படி 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது.

1. M/s.Selvarani Cabs, Thoothukudi, நிறுவனம் (ரூ.3,38,400.00/ஒரு மாதத்திற்கு)
2. M/s.Dhiliban Construction & Cabs, Thoothukudi நிறுவனம் (ரூ.3,56,000.00/ஒரு மாதத்திற்கு)

மேற்படி பணிக்கு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதும் நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு 0.47 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள L1 நிறுவனமானM/s. SELVARANI CABS, Thoothukudi (ரூ.42,300.00/ ஒரு வாகனம் x 8 வாகனம் = ஒரு மாதத்திற்கு ரூ.3,38,400. 00x 12 மாதம் = ரூ.40,60,800.00/-

எரிபொருள், ஓட்டுநர் ஊதியம் படிகள் மற்றும் வரிகள் உட்பட )நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு:

1. M/s.Selvarani Cabs, 12/1,Bryant Nagar 11th Street (West) Thoothukudi, நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.
2. M/s.Selvarani Cabs, 12/1, Bryant Nagar 11th Street (West) Thoothukudi, நிறுவனத்திற்கு பணியின் அவசரம் அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பேரில் வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/3841/2025

4) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட, கீழ்காணும் திருமண மண்டபங்கள் பொதுமக்கள் பயன்பெரும் வகையில் வாடகைக்கு வழங்கப்படுகிறது.

| வ. எண் | மண்டபம் பெயர் | ஒரு நாள் வாடகை (ரூ) | அரை நாள் வாடகை (ரூ) | வைப்புத் தொகை (ரூ) | துப்புரவு கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | அறிஞர் அண்ணா திருமண மண்டபம் | 40000 | 20000 | 20000 | 3000 |
| 2 | சிவன் கோவில் தெரு திருமண மண்டபம் | 15000 | 7500 | 10000 | 2000 |
| 3 | மாநகராட்சி மாநாட்டு மையம் | 75000 | 37500 | 50000 | 5000 |
| 4 | தெற்கு காட்டன்சாலை பார்ட்டி ஹால் | 17000 | 8500 | 10000 | 5000 |
| 5 | முள்ளக்காடு காமராஜ் நகர் சமுதாய நலக்கூடம் | 2606 | 1303 | 3000 | 1000 |
| 6 | முத்தையாபுரம் சுந்தர்நகர் சமுதாய நலக்கூடம் | 7500 | 3750 | 7000 | 2000 |

மேற்காணும் மண்டபங்களுக்கான வாடகை தொகை, வைப்புத் தொகை, துப்புரவு கட்டணம் மற்றும் மண்டபம் முன்பதிவு செய்யப்படும் விபரங்கள் பொதுமக்கள் தெரிந்திடும் வகையில் அனைத்து மண்டபங்கள் வாயிலில் டிஜிட்டல் போர்டு அமைத்திடவும் மற்றும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்திடவும் அதற்கான செலவினத் தெகையினை உரிய நிறுவனத்திற்கு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்

710)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | அ16/3875/2025 | |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சுந்தரவேல்புரம் மெயின்ரோடு (சேதுபாதை ரோடு) பகுதியில் St.தாமஸ் பள்ளிக் கட்டிடத்தின் வடமேல்புறம் தரை வாடகைக்கு ரூ.4,100/- என நிர்ணம் செய்து திரு. ஆர்.மாரி என்பவருக்கு உரிமம் ஒப்படைத்து உத்தரவிடப்பட்டது. மேற்படி இடத்தில் கடை அமைக்கப்பட்டால், பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் பள்ளி குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என தொடர் ஆட்சேபனைகள் வரப்பெற்றதை தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியின்படி, திரு. ஆர்.மாரி என்பவருக்கு உரிமம் காலம் 01.06.2025 முதல் 31.05.2026 வரை என நிபந்தனைகளுக்குட்பட்டு 02.08.2025 அன்று மாநகராட்சியினால் வழங்கப்பட்ட ஒப்படைப்பு உரிமம் இரத்து செய்து அன்னாரால் செலுத்தப்பட்ட வாடகை முன்வைப்புத் தொகை ரூ.58,056/- மற்றும் குத்தகை குத்தகை காப்பு வைப்புத் தொகை ரூ. 25,000/- திரும்ப வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :- மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றம் பரிசீலித்து ஒப்புதல் வழங்கலாம்.<br>அ16/1108/2025 | 711) அலுவலகக் குறிப்பின்படி ஒப்புதல் வழங்கப் பட்டது. |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட கட்டிடங்களில் காலியாக உள்ள அனைத்து கடைகளுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நான்கு மண்டல அறிவிப்பு பலகையில் 16.09.2025 அன்று வெளியிடப்பட்டு, 24.09.2025 (புதன்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு, ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தபுள்ளித்தாரர்கள் முன்னிலையில், வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்ட | 712) அலுவலகக் குறிப்பின்படி உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு உரிமம் வழங்க அனுமதிக்கப் பட்டது. |

விபரப்படி வரப்பெற்றுள்ளது.

<u>வ.எண். 01</u> : பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் (பழைய பேருந்து நிலையம்) வணிக வளாக **கடை எண் F23**

| மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை <u>ரூ. 14,760/-</u> | | |
|---|---|---|
| வ.எண் | காப்புதொகை செலுத்தி ஒப்பந்தபுள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள மாத வாடகை தொகை (ரூ) |
| 1 | திரு. V.நெல்சன் ரஞ்சித் குமார்,<br>3/153- ஆசிர்வாதம் நகர்,<br>சாயர்புரம். | 14,860/- |
| 2 | திருமதி. M.ரூபி ஜெனிபா,<br>5/3ஏ, கோட்டார்விளை,<br>குரும்பூர். | 14810/- |

<u>வ.எண். 02</u> : பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் (பழைய பேருந்து நிலையம்) வணிக வளாக **கடை எண் F28**

| மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை <u>ரூ. 4,433/-</u> | | |
|---|---|---|
| வ. எ ண் | காப்புதொகை செலுத்தி ஒப்பந்தபுள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள மாத வாடகை தொகை (ரூ) |
| 1 | திரு. C.கோபாலகிருஷ்ண பாபு,<br>திரு.வி.க.நகர்,<br>தூத்துக்குடி. | 4,460/- |
| 2 | திரு. G.K.பிரேம்குமார்,<br>திரு.வி.க.நகர்,<br>தூத்துக்குடி. | 4,510/- |

| | | |
|---|---|---|
| | **வ.எண். 03** : பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் (பழைய பேருந்து நிலையம்) வணிக வளாக **கடை எண் F39** | |

மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. 2,914/–

| வ. எண் | காப்புதொகை செலுத்தி ஒப்பந்தபுள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள மாத வாடகை தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | திரு. G.ஆழ்வார் முத்துக்குமார், மில்லர்புரம், தூத்துக்குடி. | 2,975/– |
| 2 | திரு. J.ராஜதுரை மீனாட்சிபுரம் 3வது தெரு, தூத்துக்குடி. | 2,900/– |

அ) மேற்படி வரிசை எண் 1 ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில், மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஆரம்ப மாத வாடகை தொகையை விட கூடுதலாக திரு. V.நெல்சன் ரஞ்சித் குமார் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.14,860/– என கோரியுள்ளார். பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் (பழைய பேருந்து நிலையம்) வணிக வளாக கடை எண் F23 க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) மேற்படி வரிசை எண் 2 ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில், மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஆரம்ப மாத வாடகை தொகையை விட கூடுதலாக திரு. G.K.பிரேம்குமார் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.4,510/– என கோரியுள்ளார். பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் (பழைய பேருந்து நிலையம்) வணிக வளாக கடை எண் F28 க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இ) மேற்படி வரிசை எண் 3 ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில், மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஆரம்ப மாத வாடகை தொகையை விட கூடுதலாக திரு. G.ஆழ்வார் முத்துக்குமார் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.2,975/– என கோரியுள்ளார். பேரறிஞர்

| | | |
|---|---|---|
| | **அண்ணா பேருந்து நிலையம் (பழைய பேருந்து நிலையம்) வணிக வளாக கடை எண் F39 க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலக குறிப்பு</u> : உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு உரிமம் வழங்க அனுமதிக்கலாம்.**<br>அ16/2943/2023 | |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி, வடக்கு மண்டலம் மீளவிட்டான் கிராமம் சர்வே எண்.535/1, 535/2 ல் 8450 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.A.முரளிதரன் என்பவரின் குடியிருப்பு மனைப்பிரிவு உத்தேசத்திற்கு உறுப்பினர் செயலர் தூத்துக்குடி அவர்களின் மூலமாக வரப்பெற்ற மனைப்பிரிவு எண்.169/2025 மற்றும் திட்ட அனுமதி எண்.103/2025 நாள்.10.10.2025 ன் படி தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>வீட்டு வசதி (ம) நகர்ப்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண் G.O.(Ms) No.181 நாள் 09.12.2020ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு வரைபடத்தின்படி மனைப்பிரிவில் அமையும் சாலைக்குரிய இடம் மாநகராட்சிக்கு பொது ஒதுக்கீடு இடமாக மாநகராட்சிக்கு தானமாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் எண் 4433/2025 நாள் 25.09.2025 உள்ளூர் திட்டக்குழுமத்தின் வழியாக ஆவணம் பெற்று மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>எப்1/4186/2025 | 713) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |
| | 8) எதிர்நோக்கும் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பொது சுகதார பணிகளுக்கு தேவைப்படும் கிருமிநாசினிகள், தளவாட சாமான்கள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு மழைக்கவசம் போன்றவற்றினை உள்ளூர்/வெளியூர் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பொது நிதியின் கீழ் கொள்முதல் செய்ய கீழ்க்கண்டுள்ளவாறு நிறுவனங்களுக்கு வேலை | 714) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |

உத்திரவு வழங்கப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பொருட்களின் விபரம் | நிறுவனத்தின் பெயர் | உத்தேச செலவினத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | ப்ளிச்சிங் பவுடர் (20000 கிலோ) | M/s.Thirisu Agency, Madurai | 9,00,000 |
| 2 | Lime Powder (60000 கிலோ) | M/s.Thirisu Agency, Madurai | 5,40,000 |
| 3 | Malathion (1000 லிட்டர்) | M/s.HIL (India) Limited, New Delhi – 110003 | 7,00,000 |
| 4 | Bacillus Thuringiensis (1000 கிலோ) | M/s. Biotech International Limited, New Delhi – 110048 | 13,00,000 |
| 5 | மழைக்கவசம் (Rain Coat) (200 Nos) | M/s.Vinayaga Agency Thoothukudi | 1,90,000 |
| 6 | தளவாட சாமான்கள் | M/s.Alpha Equipment & Machineries, Thoothukudi | 1,70,000 |
| 7 | பாதுகாப்பு உபகரணங்கள் | M/s.Vinayaga Agency Thoothukudi | 65,000 |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விபரப்படி பொது சுகாதார பணிகளுக்கு தேவைப்படும் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு மேற்கண்ட நிறுவனங்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம். எச்2/1723/2025

9) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட ஜெ.எஸ் நகர் பகுதியில் போதை மீட்பு மையம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வரவுள்ளது. இந்நிலையில்

715) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மேற்படி போதை மீட்பு மையத்தினை செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு கீழ்கண்ட பணியாளர்களை நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலம் தேசிய நகர்ப்புற நலக் குழுமத்தின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக ஈடுபடுத்த **09.10.2025** அன்று நடைபெற்ற போதைமீட்பு குழு உறுப்பினர்கள் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் படி பணியாளர்கள் விபரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் விபரம் | எண்ணிக் கை | நாள் / மாதம் ஒன்றுக்கு ஊதியம் | ஒரு வருடத்திற்கான உத்தேச செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | Psychiatric Social Worker | 1 | (25000x1=25 000) | **3,00,000** |
| 1 | செவிலியர்கள் | **4** | (18000 X 4 = 72,000) | **8,64,000** |
| 2 | கனிணி இயக்குபவர் | 1 | (13500 X 1= 13,500) | **1,62,000** |
| 3 | காவலர் | 2 | 521 X 30 X 2 = 31,260) | **3,75,120** |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 | (8500 X 1 = 8,500) | **1,02,000** |
| 5 | தூய்மை பணியாளர் | 2 | 497 X 30 X 2 = 29,820) | **3,57,840** |
| | மொத்தம் | **11** | | **21,60,960/–** |

எனவே மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களை நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலம் தற்காலிகமாக ஈடுபடுத்தவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**21,60,960/–**ம் மற்றும் அதற்கான 2% சேவைக் கட்டணம் ரூ.**43,219/–** நகர்புற வாழ்வாதார மையத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மேற்படி போதை மீட்பு மையம் திறக்கப்படவுள்ள

நிலையில், அதற்கு தேவையான மருத்துவ சிகிச்சை உபகரணங்கள் , டேபிள், சேர், படுக்கை வசதிகள், ஜன்னல் திரை, மற்றும் இதர அடிப்படை வசதிகளை நிறுவ உத்தேச தொகை ரூ.20.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து வழங்ககவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்
எச் 1 / 4049 / 2025

10) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 வெளியிடப்பட்ட அரசாணை எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.12.04.2023, விதி எண்.169 (2),(3)–ல். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்று வரும் நிர்வாகம், திட்டப்பணிகள் முன்னேற்றம், நிதிநிலை, வருவாய், நகர திட்டமிடல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு மற்றும் பொது சுகாதாரம் முதலிய நிர்வாக செயல்பாடுகள் குறித்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அறியும் வண்ணம் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும் முந்தைய நிதியாண்டு விவரங்களை நிர்வாக அறிக்கையாக தொகுத்து, மாமன்றத்திற்கு பொருள் வைத்து, மேற்படி அறிக்கையாக நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி, இம்மாநகராட்சியின் 2024 – 2025–க்காக தயார் செய்யப்பட்ட நிர்வாக அறிக்கையினை மாமன்றத்தில் பதிவு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மாமன்றம் பதிவு செய்யலாம்.

சி1/2851/2025

716) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**11) தூத்துக்குடி மாநகராட்சியின் 2024 – 2025ம் ஆண்டிற்கான அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை காலிபணியிடங்கள் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.**

## THOOTHUKUDI CORPORATION

**As per G.O. 152 Municipal Adminstration and Water Supply Department (M.C.7) Date 20-10-2022**

**As on Date 03-04-2025**

| Sl. No. | Name of the Post | Grade Pay | Group | Thoothukudi | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | Sanctioned | In positions | Vacant | Remarks |

717) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Commissioner (AD Cadre) | Level-29 Addl Dir Cadre (88OO)& L-26 Joint Dir Cadre (7600) | A | 1 | 1 | 0 | 0 |
| 2 | Deputy Commissioner (JD Cadre) | L-26 Joint Dir Cadre (7600) | A | 2 | 1 | 1 | 0 |
| 3 | AC (Zone) | Spl cadre-L25 (6600) | A | 4 | 2 | 2 | 0 |
| | | Selection Grade-L-23 (5700) & I st Grade - L-22 (5400) | B | | 0 | | |
| 4 | AC (Accounts) | Selection Grade-L-23 (5700) | B | 1 | 1 | 0 | 0 |
| 5 | AC (Personnel/ Revenue ) | Selection Grade-L-23 (5700) | B | 1 | 1 | 0 | 0 |
| 6 | Accounts Officer | L-20 (5100) | B | 1 | 0 | 1 | 0 |
| 7 | Council Secretary | L-20 (5100) | B | 1 | 0 | 1 | 0 |
| 8 | Administrative Officer | L-20 (5100) | B | 4 | 2 | 2 | 0 |
| 9 | Superintendent | L-18 (4800) | B | 10 | 9 | 1 | 0 |
| 10 | Assistant Revenue Officer | L-18 (4800) | B | 4 | 1 | 3 | 0 |
| 11 | Assistant | L-10 (2800) | C | 17 | 11 | 6 | 0 |
| 12 | Personal Clerk | L-10 (2800) | C | 3 | 0 | 3 | 0 |
| 13 | Junior Assistant | L-8 (2400) | C | 20 | 14 | 6 | 0 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 14 | Driver | L-8 (2400) | C | 2 | 16 | 0 | **14 Excess** | |
| | 15 | City Health Officer | DD-II Cadre-L-26 (7600) & Senior CHO Grade-L-25 (6600) | A | 1 | 1 | 0 | 0 | |
| | | | CHO cadre - L-23 (5700) | B | | | 0 | | |
| | 16 | Sanitary Officer | L-15 (4500) | B | 4 | 4 | 0 | 0 | |
| | 17 | Sanitary Inspector | L-11 (4200) | C | 20 | 1 | 19 | 1 No Deputation service | |
| | 18 | Entamologist | L-16 (4600) | B | 1 | 0 | 1 | 0 | |
| | | **ENGINEERING** | | | | | | | |
| | 19 | City Engineer | CE- Cadre- L-31 (9500)<br>SE Cadre -L-28 (8700)<br>EE Cadre -L-25 (6600) | A | 1 | 0 | 1 | 0 | |
| | 20 | Deputy City Engineer | EE Cadre L-25 (6600) | A | 3 | 1 | 2 | 0 | |
| | 21 | Assistant Executive Engineer | AEE Cadre L-22 (5400) | B | 5 | 4 | 1 | 0 | |
| | | | AEE Cadre L-22 (5400) | B | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | Assistant Engineer | L-20 (5100) | B | 12 | 1 | 11 | 0 |
| | Junior Engineer | L-13 (4400) | B | 4 | 4 | 0 | 0 |
| 23 | Draughtsman | L-11 (4200) | C | 3 | 0 | 3 | 0 |
| 24 | Technical Assistant / Public Works Overseer | L-11 (4200) | C | 32 | 9 | 23 | 0 |
| 25 | City Planner | L-25 (6600) EE Cadre | A | 1 | 1 | 0 | 0 |
| 26 | Assistant City Planner | L-22 (5400) AEE Cadre | B | 2 | 2 | 0 | 0 |
| 27 | Planning Inspector | L-20 (5100) AE Cadre | B | 12 | 1 | 11 | 0 |
| | **TOTAL** | | | **172** | **88** | **98** | **14** |

அலுவலக குறிப்பு மாமன்றம் பதிவு செய்யலாம்.

சி1/2851/2025

12) தூத்துக்குடி மாநகராட்சியில் பாதாளசாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமானது நாளொன்றுக்கு 28MLD கழிவுநீரினை சுத்திகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. தற்போது வரப்பெற்றுள்ள அரசாணையில் (அரசாணைஎண்......G.O(MS):145 நாள்18/09/2025) மேற்படி சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கிடைக்ககூடிய சுத்திகரிக்கப்பட்ட நீரினை Rs.10/kilolitre என்ற விலை விகிதத்தில் விற்பனை செய்யவும் மேற்படி தொகையினை வருடத்திற்கு மூன்று சதவீதம் உயர்வு செய்து ஒப்பந்தம் செய்யும் நிறுவனத்திடம் வசூல் செய்திடவும் தொடர்ச்சியாக 40 ஆண்டுகளுக்கு ஒப்பந்தங்களின் அடிப்படையில் மேற்படி சுத்திகரிப்பு நீரினை மேற்படித் நிறுவனத்திற்கு வழங்கிடும் வகையில் தொடர்புடைய நிறுவனம் மற்றும் மாநகராட்சி சார்பில் மாமன்ற அனுமதியுடன் தன்னாட்சி ஒப்பந்தங்கள் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதனை நடைமுறைப்படுத்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மற்றும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : –

718)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | 1.மாமன்றம் பதிவுசெய்யலாம்<br>2.அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொடர்புடைய AIE Fiber Resource India Private Limited, Hyderabad நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்து கொள்ள ஏதுவாக மேற்கொள்ளப்படும் தொடர்நடவடிக்கையினை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ3/1439/ 2025 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 31.10.2025

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி